THE WORLD NEEDS THE WORD
IBT

ஜனவரி 2025
மலர் 23, இதழ் 4

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# யுத்தம் கர்த்தருடையது

## *(THE BATTLE IS THE LORD'S)*



# யுத்தம் கர்த்தருடையது (THE BATTLE IS THE LORD'S)

*''கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; ... இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்,'' (யாத். 14 : 13,14)* - மோசே கூறியது. ...*யுத்தம் கர்த்தருடையது; ... கர்த்தர் பட்டயத்தினாலும், ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல. (1 சாமு. 17 : 47)* - தாவீது கூறியது.

யுத்தம் என்றால் என்ன? இரண்டு தேசங்களுக்கு இடையே நல்லதொரு உடன்பாடு இல்லாமல் இருக்குமேயானால், சின்ன சின்ன மனஸ்தாபம் / கருத்து வேறுபாடு உண்டாகி இறுதியில் சண்டை, யுத்தம், கலகம் ஏற்பட்டு விடும். வேதாகமத்திலே வரும் இராஜாக்களில் சாலொமோன் ஒருவரைத் தவிர மற்ற எல்லா ராஜாக்களுமே அநேக யுத்தங்களைக் கண்டவர்கள். இதில், தாவீது ராஜா மட்டுமே அதிகமான யுத்தக் களங்களைக் கண்டதினாலே எருசலேம் தேவாலயத்தைக் கட்ட வேண்டாமென்று தேவன் கூறி விட்டார். நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம். நீ *யுத்த மனுஷனாயிருந்து இரத்தத்தைச் சிந்தினாய்* என்று தேவன் கூறினார். சாலொமோன் காலத்திலே இஸ்ரவேல் தேசம் அமரிக்கையாயிருந்தது. அதற்குக் காரணம், தாவீது இஸ்ரவேலின் மீது ராஜாவாயிருந்த நாற்பது வருடத்திலே (எப்ரோனில் 7½ வருடம், எருசலேமில் 33 வருடம்) இஸ்ரவேலுக்கு விரோதமாயிருந்த அனைத்து பகைவர்களோடும் யுத்தம் / போரிட்டு வெற்றி வாகை சூடினபடியால் சாலொமோன் ராஜா காலத்திலே எவரும் அவனை மேற்கொள்ள-வில்லை.

வேதாகமத்திலே யுத்தம் என்ற வார்த்தையானது அதி. 14 : 2-ஆம் வசனத்தின் இறுதியில் முதலாவதாக வருகிறது. விவிலியத்தில் கூறப்பட்டுள்ள முதல் போர் (ஆதி. 14 : 8-10) இதுதான்.

*''பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது''* (1 தீமோ. 6 : 10) என்ற வசனத்திற்கு ஏற்ப செழிப்பையும், உடைமைகளையும் விரும்பிய லோத்து, எல்லாவற்றையும் இழந்து குடும்பத்தோடு அடிமைத்தனத்திற்கும், சித்திரவதைக்கும் ஆளானார்.

எபிரெயன் என்ற சொல் முதலாவதாக ஆதி. 14 : 13-இல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வேதாகமத்திலே யுத்தம் சர்வசாதாரணமாகக் காணப்பட்டது. எதற்கெடுத்தாலும் பழிக்குப் பழி, பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண், யுத்தத்திற்கு யுத்தம், வெட்டு, குத்து, கொலை என்று சாதாரணமாக இருந்தது. தங்கள் தேசத்தை விரிவுபடுத்துவதில் ராஜாக்கள் தங்கள் எண்ணத்தை நிறைவேற்ற யுத்தத்தைக் கையாண்டனர். ஆனால், தாவீது ராஜா மூலமாக தேவன் நமக்கு ஒரு எச்சரிப்புக் கொடுத்தார். அதாவது, நமது கரங்கள் கறை இல்லாமல் இருக்க வேண்டும் என்பதே. அப்படியிருந்தால் தேவனுடைய காரியத்தைச் செய்ய முயற்சிக்கக் கூடாது.

## யுத்தத்தினால் வரும் தீமைகள் :

மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் படுகிறது. கோடிக்கணக்கான செலவில் கட்டப்பட்ட கட்டடங்கள், நிறுவனங்கள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், ஸ்தாபனங்கள், வேலை செய்யும் அநேக கட்டடங்கள் எல்லாம் தரைமட்ட-மாக்கப்படுகின்றன. பொருளாதார நிதி நிலைமை மிகவும் மோசமாகி, மக்கள் தங்கள் அன்றாட வாழ்வை சரி செய்வதே மிகவும் கடினமாகி விடுகிறது. அநேக பொருட்கள் அழிந்து மக்களில் லட்சக்கணக்கானோர் இந்த உலகை விட்டு மடிந்து போகின்றனர். இப்படியான துயரங்கள் வருவதற்குக் காரணம், இரண்டு தேசத்திலே ஏதேனும் ஒரு தேசம் தாழ்ந்து போகாததே. நம் குடும்பத்திலும், நம் உடன் பிறந்தவர்கள் மத்தியிலும், நம் திருச்சபையிலும்

குழப்பமும், பிரச்சனைகளும், கோபங்களும், வருகிறதற்குக் காரணம் தாழ்ந்து போகாததே.

இரண்டு உலகப்போர் ஏற்பட்டு லட்சக் கணக்கானோர் தங்கள் உறவுகளை இழந்தனர். ஏகப்பட்ட பொருளாதார நஷ்டம் ஏற்பட்டது. அடக்கம் பண்ணுவதற்குக்கூட இடமில்லாமல் போனது. அப்படிப்பட்ட நிலைமை இனி வரவேண்டாம். மூன்றாவது உலகப்போர் வந்தால் உலகமே அழிந்து போய்விடும். காரணம், எல்லா நாடுகளும் போர் அணு ஆயுதங்களை தயாராக வைத்துள்ளன. கர்த்தருடைய கிருபையால் நம் யாவருடைய ஜீவனும் காக்கப்பட்டுவருகிறது. கர்த்தருக்கென்று இப்பொழுதே நம்மால் இயன்ற நற்செயல்களைச் செய்வோமாக. கர்த்தருடைய நற்செய்தியை பரப்பும் பணியாளர்களாக நாம் மாறுவோம்.

விவிலியத்திலிருந்து யுத்தம் செய்த ராஜாக்களைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

*''...நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக.''* ஆமென் (வெளி. 1:6).

வேதாகமத்திலே எத்தனையோ ராஜாக்கள் இஸ்ரவேல் தேசத்தையும், இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிந்த போது யூதா தேசத்தையும் அரசாண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் ராஜாக்களாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு என்னென்ன தகுதியின் அடிப்படையில் கர்த்தர் ஏற்படுத்தினார் என்று பார்த்தால்,

1. கர்த்தருக்கு கீழ்ப்படிதல். 2. கர்த்தருக்கு பயப்படுதல். 3. கர்த்தரிடம் பொய் சொல்லக் கூடாது. 4. பலசாலியாயிருக்க வேண்டும். 5. தைரியசாலியாயிருக்க வேண்டும். 6. மக்களை நேசிக்கிற உள்ளம் இருக்க வேண்டும் (Loveable Man). 7. கர்த்தரோடு பேச நேரம் ஒதுக்குகிற மனுஷனாய் இருக்க வேண்டும். 8. ஞானமுள்ளவனாயிருக்க வேண்டும். 9. தாழ்மையுள்ளவனாயிருக்க வேண்டும். 10. பழிவாங்கும் எண்ணம் இல்லாதவனாக இருக்க வேண்டும்.

மேற்கூறிய பத்து தகுதிகளை உடையவனாயிருந்தாலும், கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணுகிறவனாயிருக்க வேண்டும்.

*ஆபிரகாம், ராஜா அல்ல;* சாதாரண ஒரு மனிதன். ஆனால், தேவனால் முதல் முற்பிதாவானார். இப்படிப்பட்ட ஆபிரகாமின் வாழ்க்கையிலே ஒரு யுத்தம் நடக்கிறது. அதுதான் விவிலியத்திலே காணும் முதல் யுத்தம். ஆதியாகமம் 14 : 8-10 வசனங்களிலே கூறப்பட்டுள்ள பாதைகள் மற்றும் எல்லா உண்மைகளும் தொல்பொருள் ஆராய்ச்சி மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

தன் தம்பி மகனான லோத்து, அவன் மனைவி, பிள்ளைகள், உடைமைகள் எல்லாம் பகைவரால் சிறையாகக் கொண்டு போனதை கேள்விப்பட்டு தன் வீட்டிலிருந்த 318 பேரையும் (ஆதி. 14 : 14) அழைத்துக் கொண்டு எதிரிகளோடு போர் செய்து, அனைவரையும் மீட்டுக் கொண்டு வந்தார். போர் என்றால் என்னவென்று அனுபவமே இல்லாத முதல் முற்பிதா, தன் சகோதரனுக்காக தன் உயிரையே பணயம் வைத்து வெற்றி பெற்றார். தன்னுடைய உறவினர்களைப் பற்றிய கரிசனையும், அக்கரையும் ஆபிரகாமிடம் அதிகம் காணப்பட்டது. நம் உள்ளம் எப்படியிருக்கிறது? பிரிந்து போகிறவர்களையும் நேசித்து, உதவி செய்து காப்பாற்றும் குணம் நம்மில் காணப்பட வேண்டும்.

1. ஏலா பள்ளத்தில் நடந்த யுத்தம்
2. செப்பத்தா பள்ளத்தாக்கில் நடந்த யுத்தம்
3. கர்மேல் பர்வதத்திலே நடந்த யுத்தம்

***1. வாலிபனான தாவீதுக்கும் பெலிஸ்தனான கோலியாத்துக்கும் ஏலா பள்ளத்தாக்கில் நடந்த யுத்தம் :***

*''கர்த்தர் பட்டயத்தினாலும், ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல...*

*யுத்தம் கர்த்தருடையது. அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக் கொடுப்பார்.''* (1சாமு. 17 : 47) தாவீதின் உள்ளம் எப்படிப்பட்டது?

யூத வாலிபனான தாவீதுக்கு கர்த்தர் பேரில் இருந்த மிகுந்த விசுவாசம், விடாப்பிடியான அன்பு, இஸ்ரவேல் மக்கள் மீது கொண்ட பாசம், நட்பின் இலக்கணமாகத் தன் பகைவரின் (சவுல்) பேரனுக்கு ( மேவிபோசேத் ) உயர்வளித்தல் போன்ற நற்குணங்களை உடையவராக இருந்தார். தாவீதின் தொழில் என்னவென்று பார்த்தால் மேய்ப்பர், இசைக் கலைஞர், புலவர், போர் வீரர், அரசர் மற்றும் தீர்க்கதரிசி என்ற ஒரு மனிதனுக்குள்ளும் இத்தனை நல்ல குணாதிசயங்கள் அமைவது தேவனின் கிருபையேயன்றி வேறல்ல.

<u>*கோலியாத் :*</u> பெலிஸ்தன். அவன் தோற்றம் – ஒரு அரக்கன். உயரம் ஆறு முழமும், ஒரு ஜாணுமாம். தலையில் வெண்கலச் சீரா. கோலியாத்தின் போர் கவசம் – ஐயாயிரம் சேக்கலான வெண்கலம். கோலியாத்தின் ஈட்டியின் அலகு – அறுநூறு சேக்கல் இரும்பு. ஏலா பள்ளத்தாக்கில் சவுலும் இஸ்ரவேல் ஜனங்களும் ஒரு மலையின் மேலும், பெலிஸ்தர் ஒரு மலையின் மேலும் நின்றார்கள். பெலிஸ்தனான கோலியாத் நாற்பது நாள்கள் காலையிலும், மாலையிலும் வந்து கூப்பிட்டு நின்றான்.

<u>*தாவீதின் கையிலிருந்த ஆயுதம் :*</u>

ஒரு தடி, ஐந்து கூழாங்கற்கள், ஒரு கவண், அடைப்பை (1சாமு. 17 : 40).

<u>*கோலியாத்தின் கையிலிருந்த ஆயுதம் :*</u>

பட்டயம், ஈட்டி, கேடயம் (1சாமு. 17 : 45).

<u>*தாவீதின் உறுதிமொழி :*</u>

*''...என்னைச் சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார்'' என்றார்... (1 சாமு. 17 : 37).*

ஏலா பள்ளத்தாக்கின் இரு பக்கமும் பலமான யுத்தம் நடந்து கொண்டிருந்தது. பெலிஸ்தனுடன் போரிட சவுலினுடைய இருப்பிடத்தை விட்டு தாவீது செல்லும் போது, சவுல் என்ன செய்திருக்க வேண்டும்?

இஸ்ரவேல் யாவரிலும் மிகுந்த உயரமும், கெம்பீரமான தோற்றமும் கொண்ட அரசரான சவுல் கோலியாத்தோடு போரிடச் செல்லாமல் சிறுவனான தாவீதை அனுப்பியது சரியல்ல.

வெற்றி தர வாள், ஈட்டி, அம்பு போன்ற ஆயுதங்களால் மட்டுமின்றி, சிறு கூழாங்கல்லினாலும் வெற்றி தரவும் கர்த்தரால் முடியும் என்பதை முழுவதுமாக விசுவாசித்த தாவீது, தனக்கு பழக்கமான கவணையும், கல்லையும் எடுத்துக் கொண்டு யுத்தத்திற்குச் சென்றான் (1சாமு. 17 : 45).

*''நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன்... உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்''* (சங். 23) என்ற வசனம் மனதில் நின்றதால், தடியை கொண்டு சென்றிருக்கலாம்.

கோலியாத் அற்பமாக தாவீதை நினைத்திருக்கலாம். "யுத்தம் கர்த்தருடையது" என்று கூறிய தாவீதோடு சேர்ந்து கர்த்தர் போரிடுகிறார் என்பதை கோலியாத் உணரவில்லை.

கர்த்தர் ஒருவர் உண்டு என்பதையும், பட்டயத்தினாலும், ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல. அற்புதமாக, அதிசயமாக ரட்சிக்கிறவர் என்பதை பெலிஸ்தர் யாவரும் அறிந்து தெளிவாக வேண்டும் என்பதே தாவீதின் உள்ளான நோக்கம்.

<u>*ஏலா பள்ளத்தாக்கில் யுத்தம் எப்படி நடந்தது?*</u>

நாற்பது நாள்களாக ஏலா பள்ளத்தாக்கின் ஒரு பக்கம் வந்து கூப்பிட்டு நின்று கொண்டிருந்த கோலியாத் தன்னுடைய முடிவு எப்படியாகும்? யாருடைய கையால் தன் தலை எடுக்கப்படும்? யுத்தமானது எத்தனை நாட்களாக தனக்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் நடக்குமென்று எதுவும் அறியாத ஒரு யுத்தவீரனாக நின்றான்.

பெலிஸ்தன் மேட்டிமையாக வந்து நின்ற அந்த நொடிப் பொழுது தாவீது தீவிரமாக அந்த சேனைக்கும் பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி, தன் கையை அடைப்பத்திலே போட்டு அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து கவணிலே வைத்து சுழற்றினான். அந்தச் சிறு கூழாங்கல், கோலியாத்தின் தலையின் மேலிருந்த பெரிய வெண்கலத் தலைச் சீராவை உடைத்துக் கொண்டு நெற்றியில் பட்டு மண்டையோட்டை உடைத்து தலைக்குள் சென்றது. *கோலியாத்தை முகங்குப்புற விழச் செய்தது கர்த்தரின் செயல்.*

*<u>யுத்தமானது ஒரு சில நிமிடங்களில் நடந்து முடிந்தது.</u>*

கோலியாத்தின் தலையை கோலியாத்தின் வாளாலே தாவீது வெட்டினான். பெலிஸ்தர் பயந்து ஓடினார்கள். இஸ்ரவேலர் அவர்களைத் துரத்தி துரத்தி வெட்டினார்கள். வெற்றியடைந்தார்கள். தாழ்மைக்கு எதிரானது மேட்டிமை. கோலியாத்தின் மேட்டிமை கர்த்தரின் காலடியில் வந்து வீழ்ந்தது. மேட்டிமையானவனையோ தேவன் தூரத்திலிருந்து அறிகிறார்.

தாவீது – கோலியாத் யுத்தம் இன்றும் உலகமெங்கும் பேசப்படுகிறது. இளையவன் பெரியவனைத் தோற்கடித்தால் அது தாவீது – கோலியாத்தைப் போன்றது. *இஸ்ரவேலின் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லோரும் அறிந்து கொள்வார்கள்* (1 சாமு. 17 : 46) என்று தாவீது கூறின வார்த்தையானது இன்று வரை நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

*<u>2. செப்பத்தா பள்ளத்தாக்கில் நடந்த யுத்தம் :</u>*

***"...பலமுள்ளவனுக்காகிலும், பலனற்றவனுக்காகிலும், உதவி செய்கிறது தேவனே உமக்கு லேசான காரியம்..." (2 நாளா. 14 : 11).***

2 நாளாகமம் 14 : 11–ஆம் வசனமானது ஒரு யூதா ராஜாவுடைய ஜெபம். ஆசா என்னும் யூதா ராஜாவும் சேரா என்னும் எத்தியோப்பியனுக்கும் நடக்கும் யுத்தம். இரண்டு பேரும் செப்பத்தா என்னும் பள்ளத்தாக்கில் ஆளுக்கு ஒரு பக்கமாக எதிர் எதிராக தங்கள் சேனைகளோடு நின்று கொண்டிருந்த போது, யூதா ராஜாவாகிய ஆசா கர்த்தரை நோக்கி ஜெபம் செய்கிறான். அந்த ஜெபத்திற்கு கர்த்தர் ஒரு அங்கீகாரம் கொடுத்தாரா? ஆசா ராஜாவுக்கு வெற்றி கிடைத்ததா? என்று இந்த யுத்தத்திலே பார்ப்போம்.

*<u>ஆசா யார்? அவரது படைபலம் என்ன?</u>*

சாலொமோன் – ரெகொபெயாம் – அபியா – ஆசா – சாலொமோன் ராஜாவுக்கு மூன்றாவது தலைமுறை ஆசா ராஜா. ஆசா ராஜாவுக்கு பராக்கிரம சாலிகளான ஈட்டியைப் பிடிக்கிறவர்கள் மூன்று லட்சம் பேர். வில்லை நானேற்றுபவர்கள் இரண்டு லட்சத்து எண்பதினாயிரம் பேர் சேனையிருந்தது.

*<u>எத்தியோப்பியனின் சேனை படைபலம் :</u>*

எத்தியோப்பியனான சேராவுக்கு பத்து லட்சம் பேர் மற்றும் முந்நூறு இரதங்களோடு கொண்ட சேனை படைபலம் இருந்தது.

சேராவும், ஆசா ராஜாவும் செப்பத்தா என்னும் பள்ளத்தாக்கில் ஆளுக்கு ஒரு பக்கமாக எதிர், எதிராக யுத்தத்திற்கு அணிவகுத்து நின்றார்கள். யூதாவின் ராஜாவான ஆசா தன்னுடைய சேனையின் எண்ணிக்கையை விட மூன்று மடங்கு அதிகமாக உள்ள எத்தியோப்பியனுடைய சேனையைக் கண்டு பயந்து போனான். தன்னுடைய சேனையின் படைபலம் பெலவீனமானது என்று அறிந்து, தன்னுடைய சேனையானது சேராவின் சேனையை வெல்வதற்கு யுத்தக் களத்திலே போர் முனையிலே தேவனை தன் பக்கத்தில் வந்து துணை நிற்குமாறு கூப்பிட்டான். எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய ஜெபத்திற்கும், விண்ணப்பத்திற்கும் ஒரு அங்கீகாரத்தை கர்த்தர் கொடுக்கிறார். யாருடைய விண்ணப்பத்தையும்

நிராகரிக்கவே மாட்டார். புறஜாதியாராக இருந்தாலும் கர்த்தர் அவர்கள் ஜெபத்திற்கு துணை நிற்பார் என்பதில் சந்தேகமே இல்லை.

a) கானானியப்பெண்ணின் கூப்பிடுதலுக்கு திரும்பிப் பார்த்தார் நம் ஆண்டவர்.

b) சமாரியப் பெண்ணிற்கு தாகம் எடுக்காத ஜீவத் தண்ணீரைக் கொடுத்தார்.

c) நூற்றுக்கு அதிபதி தன்னுடைய வேலைக்காரனின் சுகத்திற்காக நம் ஆண்டவர் முன் வந்து நின்றபோது, நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார்.

d) சகேயு – யூதன். எரிகோ பட்டணத்தார் அவனை வெறுத்தாலும், ஆண்டவரை நேரிடையாகக் காண வேண்டுமென்ற ஆவல் கொண்டதைக் கண்டு சகேயுவுக்கு நேராக வந்து நின்று தன்னை வெளிப்படுத்தினார்.

e) சிம்சோன் பெலிஸ்தர்களால் சித்ரவதைப்பட்ட சமயம் செய்த ஒரு சிறு ஜெபத்திற்கு பெலனைத் தந்து, மூவாயிரம் பெலிஸ்தரை மடிந்து போக சிம்சோனை நடத்தினார்.

இதுபோல் விவிலியத்தில் வரும் பாத்திரங்களுக்கு மட்டுமல்லாமல், நமக்கும் கூட நாம் அவரை நாடித் தேடி நோக்கி கூப்பிடும் சமயத்தில் உதவி செய்வார், செய்கிறார்; செய்தார்.

யூதாவின் ராஜாவான ஆசா தன் படைப்பலத்தின் பெலவீனத்தை அறிந்து *தன்னைத் தாழ்த்தி* ஆண்டவரைக் கூப்பிட்டான்.

*''கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும், பலனற்றவனுக்காகிலும், உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம். எங்கள் தேவனாகிய கர்த்தாவே எங்களுக்கு துணை நில்லும்; உம்மைச் சார்ந்து.... ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ள விடாதேயும்,''* என்றான் (2 நாளா. 14 : 11). யுத்தம் ஆரம்பமானது, அப்பொழுது கர்த்தர் அந்த எத்தியோப்பியரை *முறிய அடித்ததினால்* எத்தியோப்பியர் ஓடிப் போனார்கள். எத்தியோப்பியர் திரும்ப பலம் கொள்ளாதபடிக்கு *முறிந்து விழுந்தார்கள்.* கர்த்தருக்கும் அவருடைய சேனைக்கும் முன்பாக *நொறுங்கிப் போனார்கள்.*

சுற்றுப் பட்டணங்களையெல்லாம் யூதா தேசத்து பராக்கிரமசாலிகள் முறிய அடித்தார்கள். அந்தப் பட்டணங்களையெல்லாம் கொள்ளையிட்டார்கள். மிருக ஜீவன்கள் இருந்த கொட்டாரங்களையும் இடித்துப்போட்டு திரளான ஆடுகளையும், ஒட்டகங்களையும் சாய்த்துக் கொண்டு எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

ஆசாவின் தேவனாகிய கர்த்தர் அவனோடிருக்கிறதைக் கண்டு இஸ்ரவேலிலிருந்து திரளான ஜனங்கள் ஆசாவின் பட்சத்தில் சேர்ந்தார்கள். தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டு பண்ணின ஆசாவின் தாயாகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு ஆசா ராஜா விலக்கிப் போட்டு, அவளுடைய விக்கிரகத்தையும் உடைத்து, சுட்டெரித்துப் போட்டான். இவையெல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தருக்குள் ஆசா உத்தமமாயிருந்தான்.

ஆசா ராஜா அரசாண்ட முப்பத்தைந்தாம் வருடம் மட்டும் யுத்தம் இல்லாதிருந்தது. பார்த்தீர்களா! ஒரு ஜெபமானது ஆசா ராஜாவின் வாழ்க்கையையே திருப்பிப் போட்டது. கர்த்தரை தன் யூதா தேசத்து ஜனங்களுக்கு துணையாக வந்து நிற்குமாறு ஜெபித்தபோது, கர்த்தர் வந்து நின்றார். கர்த்தரும் சேர்ந்து போர் செய்கிறார் என்று சேரா அறியாதிருந்தான். வெற்றியை ஆசா பெற்றுக் கொண்டான்.

*__3. கர்மேல் பர்வதத்தில் நடந்த யுத்தம் :__*

*''...அக்கினியால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம்... என்று எலியா சவால் விட்டார்''* (1 இராஜா. 18 : 24).

ஒரு மலையின் மேல் இஸ்ரவேல் ராஜாவின் ஆட்களான 450 பாகால் தீர்க்கதரிசிகளுக்கும்

தேவனுடைய மனிதனான எலியா தீர்க்கனுக்கும் நடந்த யுத்தம். எந்தவொரு ஆயுதமும் இல்லாமல் பட்டயமோ, கேடகமோ, ஈட்டியோ, சேனையோ இல்லாமல் நடந்த ஒரு யுத்தம். யுத்தத்தின் கருப்பொருள், *''உண்மையான தெய்வம் யார்?''* என்பதே.

*என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.* யாத். 20:3

கர்த்தர் கொடுத்த 10 கட்டளைகளில் முதல் கட்டளை நமக்குத் தேவாதி தேவன் ஒருவர் மட்டுமே. வேறு எந்த சொரூபத்தையாகிலும், விக்கிரகத்தையாகிலும், சேவிக்கவும், வணங்கவும் வேண்டாம் என்பதே மோசேயிடம் கொடுத்த கட்டளை.

இந்தப் பகுதியிலே இரண்டு நபர்களைக் காணலாம். ஒன்று ஒபதியா மற்றொன்று எலியா.

## *யார் இந்த ஒபதியா :*

அரண்மனை விசாரிப்புக்காரன். ஆகாப் ராஜாவின் மனைவியான யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை சங்கரித்த போது ஒபதியா 100 தீர்க்கன்களைச் சேர்த்து அவர்களை கெபிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்து வைத்து அவர்களுக்கு அப்பமும், தண்ணீரும் கொடுத்து போஷித்தவன்.

## *யார் இந்த எலியா :*

தேவனுடைய பிரசன்னத்தில் வாழ்ந்தவர். தேவனோடு பேசினவர். உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டாவது நபர். ஆகாப் ராஜா மற்றும் ஜனங்களுக்கு முன்பாக கர்மேல் பர்வதத்தில் பகிரங்கமாக சவால் விட்டார். மறுரூப மலையில் கிறிஸ்துவுடனும், மோசேயுடனும், மகிமையில் காணப்பட்டார்.

ஒருநாள் ஒபதியா ஒரு பாதையில் போய் கொண்டிருக்கும் போது எலியாவைப் பார்க்கிறான். எலியா, தான் தேசத்திற்கு வந்திருக்கும் விஷயத்தை ஆகாபிடம் போய் சொல்லுமாறு ஒபதியாவிடம் கூறுகிறான். ஒபதியாவோ மிகவும் பயப்படுகிறான். அதன்பின் எலியா இன்று என்னை ஆகாபிடம் நேராக வந்து காண்பிப்பேன் என்று கூறினார். உடனே ஒபதியா ஓடிப்போய் ஆகாப் ராஜாவிடம் கூறினான். ஆகாப் ராஜா எலியாவை சந்திக்கப் புறப்பட்டு வந்தான்.

## *ஆகாப் ராஜா கேட்ட கேள்வி :*

இஸ்ரவேலைக் கலங்கப் பண்ணுகிறவன் நீயல்லவா! என்றான்.

## *எலியா தீர்க்கனின் பதில் :*

நான் அல்ல; கர்த்தருக்கு விருப்பமில்லாத பாகால்களைப் பின்பற்றினதால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப் பண்ணுகிறவர்கள் என்று பதிலுரைத்தார். அத்தோடு நில்லாமல், பாகால் தீர்க்கதரிசிகள் 450 பேரையும் தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறு பேரையும் கர்மேல் பர்வதத்தில் என்னிடத்தில் கூட்டிக் கொண்டு வா என்று எலியா கூறினார்.

## *எலியா ஜனங்களை நோக்கிக் கூறியது :*

கர்த்தரின் தீர்க்கதரிசிகள் எல்லோரும் மடிந்து போனார்கள். நான் ஒருவன் மட்டும்தான் மீந்திருக்கிறேன். பாகால் தீர்க்கதரிசிகளாகிய நீங்களோ 450 பேர். இரண்டு காளைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள். பாகாலை வழிபடுபவர்களுக்கு ஒரு காளையும், ஜீவனுள்ள தேவனை வழிபடும் எலியா தனக்கு ஒரு காளையும் எடுத்துக் கொண்டனர். அந்தக் காளையை சந்து சந்தாக வெட்டி விறகு கட்டைகள் மேல் நெருப்பு போடாமல் அடுக்கினார்.

முதலில் பாகால் தீர்க்கன்கள் காலை முதல் மதியம் வரை பாகாலை கூப்பிட்டார்கள். *எந்த ஒரு சத்தமும் பிறக்கவில்லை.* அதன்பின் எலியா தகர்ந்து போன பலிபீடத்தை செப்பனிட்டு யாக்கோபுடைய குமாரர்களாகிய 12 பேரின் இலக்கமாக 12 கற்களை எடுத்து, கர்த்தருக்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி, விறகுகளின் மேல் காளையின் துண்டுகளை அடுக்கினார். 12 குடம் தண்ணீர் கொண்டு வந்து சர்வாங்க தகனபலியின்

மேல் ஊற்றினார்கள். அது வாய்க்காலையும் நிரப்பிற்று.

## *எலியாவின் பகிரங்க சவால் மற்றும் ஜெபம் :*

அக்கினியால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்று பாகால் தீர்க்கதரிசிகள் மற்றும் ஆகாப் ராஜாவின் முன் பகிரங்கமாக சவால் விட்டார்.

ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரனென்றும், இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப் பண்ணும். தேவரீர் தங்கள் இருதயத்தைத் திருப்பினீர் என்று இந்த ஜனங்கள் அறியும்படிக்கு என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்று இரண்டு முறை கர்த்தரை நோக்கி கூப்பிட்டார் எலியா.

*Hear me, O Lord, here me, that this people may know that thou art the Lord God and that tho hast turned their heart back again (1 King 18 : 37).*

எலியாவின் கூக்குரல் பரலோகத்திலிருந்த கர்த்தருடைய செவியில் கேட்டது. ஆண்டவரே எனக்காக இறங்கி வாரும். தனி ஒருவனாக நின்று கொண்டிருக்கிறேன். எனக்கென்று உம்மைத் தவிர வேறே துணையில்லை. நான் பேசின வார்த்தைகள் எல்லாம் உண்மை என்பதை அக்கினியாக நீர் இறங்கினால்தான் இந்த பாகால் ஜனங்கள் நம்புவார்கள். சீனாய் மலையில் மோசேக்காக இறங்கின தேவனே, ஆபிரகாமுக்காக மோரியா மலையில் இறங்கின கர்த்தாவே, இஸ்ரவேல் மக்களுக்காக 40 வருடமாக முன்நடந்த தெய்வமே, உம்முடைய ஜனத்திற்கு சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்து, வெட்டாந்தரையில் இக்கரை துவங்கி மறுகரை வரைக்கும் வழிநடத்திய தேவனே எனக்காக ஒரு விசை மட்டும் இறங்கி அக்கினியினால் உத்தரவு அருள வேண்டுமாய் கேட்கிறேன் என்று ஜெபித்தார்.

கர்த்தர் எலியாவின் சத்தத்தையும், விண்ணப்பத்தையும் கேட்டு, அக்கினியினால் உத்தரவு அருளுவதற்காக கர்மேல் மலையில் அக்கினியாய் இறங்கி அந்த சர்வாங்க தகனபலியையும், விறகு, கல், மண், தண்ணீர் யாவற்றையும் பட்சித்துப் போட்டார். அதைக் கண்ட மக்கள் எல்லோரும் கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்.

கர்மேல் பர்வதத்தில் நடந்த யுத்தம் கர்த்தருடையது. எவ்வளவு பெரிய தீர்க்கனாகவோ, ராஜாவாகவோ இருந்தாலும், யுத்தம் என்று ஒன்று கர்த்தருடைய ஜனங்களுக்கு எதிராக வந்துவிட்டால், கர்த்தர் அந்த யுத்தத்திற்கு தலைமையேற்று நடத்துவார். வெற்றி சிறக்கப் பண்ணுவார் என்பதில் சந்தேகமே வேண்டாம்.

*"The Lord, He is the God. The Lord, He is the God."*

ஏலா பள்ளத்தாக்கில் நடந்த யுத்தம் ஒரு புற ஜாதியானுக்கும் ஒரு தேவ வாலிபனுக்கும், ஓரிரு நிமிடங்களில் நடந்து முடிந்த யுத்தம் – இடைப்பட்டது நமது தேவன். இதில் இஸ்ரவேலருக்கு வெற்றி கிடைத்தது.

செப்பத்தா பள்ளத்தாக்கில் நடந்த யுத்தம் ஒரு புறஜாதியானுக்கும் ஆசா ராஜாவின் ஜெபத்திற்கும் ஏற்பட்ட போராட்டம். இடைப்பட்டது நமது கர்த்தர். யூதா தேசத்துக்கு வெற்றியைக் கொடுத்தார்.

கர்மேல் பர்வதத்தில் நடந்த யுத்தம் விக்கிர ஆராதனைக்காரருக்கும் – கர்த்தரே உண்மையான தெய்வம் என்று வாழ்ந்த எலியா தீர்க்கனுக்கும் நடந்த பகிரங்கமான யுத்த சவால். அக்கினியாக இறங்கி, அக்கினியால் உத்தரவு அருளும் தெய்வமே நிகரில்லா தெய்வம் என்று எலியாவின் கூக்குரலுக்கு தன்னை வெளிப்படுத்திய தேவாதி தேவனாம் நம் ஆண்டவரை தாழ்ந்து, பணிந்து, ஸ்தோத்திரிப்போமாக!

ஆமென்!

*– திருமதி. பேர்ல் குயிலிராஜா*

# ஆசிரியர் மடல்

கர்த்தருக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*''உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்'' (ஆகாய் 1:7).*

இந்த வார்த்தை எப்பொழுது சொல்லப்-படுகிறதென்றால், சாலொமோன் கட்டின தேவாலயம் நேபுகாத்நேச்சாரால் தீக்கொளுத்தப் பட்டு அழிக்கப்பட்டு, எருசலேமில் தேவாலயம் இல்லாதிருந்தது. ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்குப் பிறகு கர்த்தர் கோரேஸ் மன்னனின் ஆவியை ஏவினதினால் எருசலேமில் திரும்ப ஆலயத்தைக் கட்ட பாபிலோனுக்கு சிறைப்பட்டு போன இஸ்ரவேல் ஜனங்களை எருசலேமுக்கு திரும்ப அனுப்பினான். எருசலேமுக்கு வந்த இஸ்ரவேல் ஜனங்கள் ஆலயத்தைக் கட்ட தொடங்கினார்கள். ஆலயத்தின் கட்டுமானப் பணி நடைபெறுவதைக் கண்ட இஸ்ரவேலருடைய சத்துருக்கள், அதற்கு விரோதமாக சதி ஆலோசனை பண்ணி அர்த்தசஷ்டா என்னும் பெர்சியா ராஜாவின் உத்தரவினால் தேவாலயக் கட்டுமானப் பணியை சில காலம் நிறுத்திப் போட்டார்கள். இதினால் மனசோர்வடைந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட இது ஏற்ற காலமில்லை என்று எண்ணி, தொடர்ந்து முயற்சி எடுக்காமல் அதை விட்டு விட்டு, தங்களுடைய வீடுகளை கட்டத் தொடங்கினார்கள். அப்பொழுதுதான் கர்த்தர் ஆகாய் தீர்க்கதரிசி மூலமாய் ஜனங்களிடத்தில் பேசினார்.

“இந்த வீடு (தேவாலயம்) பாழாய்க் கிடக்கும் போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ? இப்போதும் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள்.”

*''நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக் கொண்டு வருகிறீர்கள்; நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை; குடித்தும் பரிபூரண மடையவில்லை; நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விடவில்லை; கூலியை சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான்'' என்றார் (ஆகாய் 1:6).*

இந்த புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்க போகிற நாமும், தேவன் தங்குகிற ஆலயமாகிய நம்முடைய சரீரத்தைக் கட்டி, சீர்படுத்துவோமாக! உலகப் பிரகாரமான ஆசீர்வாதத்தை பிரதானமாகத் தேடாமல், கர்த்தருடைய ராஜ்யத்தை கட்டவே அதிகமாக பிரயாசப்படுவோமாக. இன்னும் இந்திய தேசத்தில் இரட்சிக்கப்படாத ஏராளமான ஜனங்களும், ஜாதிகளும் உண்டு. தேவாலயம் இல்லாத இலட்சக்கணக்கான கிராமங்களும், பட்டணங்களும் உண்டு. தேவன் நமக்கு கொடுத்த ஆசீர்வாதத்திற்கு தக்கதாக நாமும் தேவனுடைய ராஜ்யத்தை கட்டுவோமாக.

*''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்'' (மத். 6:33).*

கடந்த நவம்பர் மாதம் 5-ஆம் தேதியன்று 7 மொழிபெயர்ப்பாளர்கள் சட்டிஷ்கார் மற்றும் ஒடிஷா மாநிலத்திலிருந்து கோவை IBT மையத்திற்கு வந்து தங்கி, தங்கள் பணிகளை மேற்கொண்டார்கள். இதில் Paratext பதிவு செய்யாதவர்களுக்கு, பதிவு செய்து கொடுக்கப்பட்டது. பின் அவரவர் மொழிபெயர்ப்புச்

# IBT-இன் நிகழ்வுகள்



20.10.2024 அன்று மதுரை All Saints சபையில் IBT ஊழிய அறிமுகம் கொடுக்கும் திரு. வரமணிராஜ் அவர்கள்.



20.10.2024 அன்று மதுரை All Saints சபையில் தேவ செய்தி பகிர்ந்து கொள்ளும் திரு. E.D. ராஜகுமார் அவர்கள்.



2.10.2024 அன்று ஈரோடு C.S.I. பிரப் சபை வளாகத்தில் நடந்த IBT குடும்பக் கூடுகையில் தேவ செய்தியளிக்கும் Pr. சாலமோன் புரூஸ்லி அவர்கள்.




13.10.2024 அன்று கோவை, போத்தனூர், Vision Church of God சபையில் IBT ஊழிய விளக்கம் அளிக்கும் திரு. M. ஜான்வில்லியம் அவர்கள்.



ஒடிஷா பணித்தளப் பார்வையின்போது 19.10.2024 அன்று நங்கநால் பணித்தளம் IBT சபையில் தேவசெய்தியளிக்கும் சகோ. S. ராஜன் அவர்கள்.



IBT முன்னேற்ற பணியாளர்கள் ஒடிஷா சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு பரிசுகளும், தின்பண்டங்களும் கொடுக்கிறார்கள்.

# IBT-இன் நிகழ்வுகள்



பணித்தளப் பார்வைக்குச் சென்ற IBT முன்னேற்றப் பணியாளர்களுடன் சிறுவர் இல்லப் பிள்ளைகள்.



ஒடிஷா லேம்டப்புட்டில் அக்டோபர் 5–7 தேதிகளில் நடைபெற்ற Mut Marriage Enrichment Seminar-இல் IBT ஒடிஷா மிஷனெரி சகோ. சம்பத்குமார் தன் குடும்பத்தாரோடு பங்கேற்றார்.



நவம்பர் மாதம் 11–ஆம் தேதி முதல் 15–ஆம் தேதி வரை நடைபெற்ற பண்டேலி புதிய ஏற்பாடு சரிபார்ப்புப் பணியில் BSI Associate Director Rev. சுப்ரமணியுடன் மொழிபெயர்ப்பாளர் Mrs. தேவேஸ்குமாரி.



நவம்பர் மாதம் 5–ஆம் தேதி முதல் டிசம்பர் 15–ஆம் தேதி வரை கோவை IBT மையத்தில் 7 மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் மொழிபெயர்ப்பு, கீ–இன் பணிகளைச்செய்தனர்.



ஒடிஷா சந்தோஷ்ப்பூர் பணித்தளத்தில் கைப்பிரதிகள் கொடுக்கும் மிஷனெரி சகோ. இஸ்ரேல் எட்லா.



10.11.2024 தேதியன்று திருமங்கலம் CSI அற்புத நாதர் ஆலயத்தில் IBT ஊழிய அறிமுகமும், தையல் பயிற்சி முடித்த பெண்களுக்கு நற்சான்றிதழும் வழங்கப்பட்டது.

சார்ந்த பணிகளைச் செய்து, டிசம்பர் மாதம் 15-ஆம் தேதியன்று தங்கள் பணித்தளங்களுக்குச் சென்றார்கள்.

நவம்பர் மாதம் 9-ஆம் தேதியன்று மத்தியப் பிரதேசத்திலிருந்து பண்டேலி மொழிபெயர்ப்பாளர் சகோதரி. தேவேஷ்குமாரி இம்மொழியிலுள்ள புதிய ஏற்பாடு சரிபார்ப்புக்காக கோவை வந்திருந்தார். பெங்களூர் BSI-லிருந்து Associate Director (Translation) Rev. Dr. சுப்ரமணி அவர்கள் இங்கு வந்து, 15-ஆம் தேதி வரை சரிபார்ப்புப் பணியை மேற்கொண்டார்.

கடந்த நவம்பர் மாதம் 10-ஆம் தேதியன்று திருப்பூரிலுள்ள Hosanna Prayer Assembly சபை காலை ஆராதனையில் சகோ. E.D. ராஜகுமார் அவர்கள் தேவசெய்தி கொடுத்து ஊழிய அறிமுகம் செய்தார். இதில், ஒடிஷா மற்றும் சட்டிஸ்கார் பணித்தளங்களிலிருந்து வந்திருந்த மிர்கான் மொழிபெயர்ப்பாளர் சகோ. கேசப் மிர்கானும், சோபத்ராம் இருவரும் தங்களை அறிமுகப்படுத்தி, ஊழியப்பணி குறித்து விளக்கிக் கூறினார்கள். இதே தேதியில் கோவை செல்வபுரத்திலுள்ள "JESUS THE FOUNDATION MINISTRY" சபையில் திரு. S. தீமோத்தி அவர்கள் தேவ செய்தியளிக்க, சகோ. K. கிடியோன் IBT ஊழிய விளக்கமளித்தார். ஒடிஷாவிலிருந்து வந்திருந்த 5 மொழி பெயர்ப்பாளர்களும் ஆராதனையில் பங்கு பெற்று, சகோ. பீதாம்பர் மொழிபெயர்ப்பு பணி குறித்து விளக்கிக் கூறினார். சந்தர்ப்பம் கொடுத்து, காணிக்கையும் கொடுத்த சபை பாஸ்டர்கள், மூப்பர்கள், பங்கு பெற்ற விசுவாசிகள் அனைவருக்கும் IBT நன்றி கூறுகிறது. கர்த்தர் சத்திய வார்த்தை வாசகர்களாகிய உங்கள் அனைவரையும், IBT தாங்குநர்களையும், ஜெபப் பங்காளர்களையும் இப்புதிய ஆண்டில் எல்லாவித நன்மைகளினாலும் முடிசூட்டுவாராக!

தொடர்ந்து IBT ஊழியப் பணிகளுக்காக ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

கர்த்தரின் பணியில்,  
*உங்கள் சகோதரன்*  
***K. ஜெய்சிங்***

# உலகச் செய்திகள்

★ சென்னை கிராண்ட்மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் சாம்பியன் பட்டத்தை தமிழகத்தின் அரவிந்த் சிதம்பரம் கைப்பற்றினார். சேலஞ்சர்ஸ் பிரிவில் சாம்பியன் பட்டத்தை பிரணவ் வசப்படுத்தினார்.

★ மத்திய ஆப்பிரிக்காவை சேர்ந்த சாட் நாட்டில் போகோ ஹராம் பயங்கரவாதிகள் 96 பேரை ராணுவம் சுட்டுக் கொன்றது. இதில் ராணுவ வீரர்கள் 17 பேர் கொல்லப்பட்டனர்.

★ நவம்பர் மாதம் விருதுநகரில் நிகழ்ந்த பட்டாசு ஆலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குழந்தைகளின் உயர் கல்வி வரையிலான கல்விச் செலவு அனைத்தையும் தமிழக அரசு ஏற்கும் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

★ அசாதாரண தட்பவெப்பம் காரணமாக கடந்த 9 மாதங்களில் இந்தியாவில் 3,200 பேர் உயிரிழந்துள்ளனர். 2.3 லட்சம் வீடுகள், 32 லட்சம் ஹெக்டேர் பயிர்கள் சேதம் அடைந்துள்ளதும் தெரிய வந்துள்ளது.

★ இந்தியாவிலிருந்து ஹசீனாவை நாடு கடத்த இன்டர்போல் உதவியை நாடுகிறது வங்கதேசம்.

★ இந்தியாவின் உச்சநீதிமன்றத்தில் 51-வது புதிய தலைமை நீதிபதியாக நீதிபதி சஞ்சீவ்கன்னா நவம்பர் மாதம் 10-ஆம் தேதியன்று பதவியேற்றார்.

# பணித்தளச் செய்திகள்

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. ஜெயந்த் பானிகிரகி*
*மொழி : சம்பல்புரி*
*பணித்தளம் : பர்கர் (ஒடிஷா)*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

சம்பல்புரி மொழியில் வேதாகமத்தை மொழி பெயர்க்கும் பணியில் என்னை இணைத்ததால், கர்த்தரை நான் நன்றியுடன் துதிக்கிறேன்.

ஒடிஷா மேற்குப் பகுதிகள் 13 மாவட்டங்களில் அதிக அளவிலான மக்கள் பேசும் மொழி, இந்த சம்பல்புரி மொழியாகும். இந்த மொழியில் மொழிபெயர்ப்பு முடித்து, புதிய ஏற்பாடு வெளியிட்டு விநியோகிக்கும்படியான கிருபை எனக்கு கிடைத்ததற்கு கர்த்தருக்கு நான் நன்றியுடைய-வனாயிருக்கிறேன். தற்போது பழைய ஏற்பாடு புத்தகங்கள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வருகிறது. கடந்த மாதம் யாத்திராகமம் 7-ஆம் அதிகாரம் முதல் 12-ஆம் அதிகாரம் வரையிலும் மொழிபெயர்ப்புப் பணி செய்யப்பட்டு Para Text Software-இல் கணினியில் கீ-இன் செய்யப்பட்டது. ஆதியாகமம் 3, 12, 22 ஆகிய அதிகாரங்கள் மொழிபெயர்ப்பு செய்வதற்கு கடினமான பகுதிகளாகும். சில வார்த்தைகளுக்கு சரியான அர்த்தம் கண்டுபிடிக்க மிகவும் சிரமமானது. ஆனாலும் கர்த்தரின் கிருபையால், முழுவதும் முடித்து விட்டேன். பழைய ஏற்பாடு சரிபார்ப்புப் பணிக்காக அக்டோபர் மாதம் பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்திற்குச் சென்று, ஒரு வார காலம் தங்கியிருந்து சரிபார்ப்புப் பணி மேற்கொள்ளப் பட்டது. என் மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு புத்தகங்களை தடையின்றி துரிதமாகச் செய்யவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*முன்னேற்றப் பணியாளர் :*
*சகோ. மனோனிட்டாசிங்*
*பணித்தளம் : துர்கா நகர் (ஆந்திரா)*

கர்த்தருக்கே துதி உண்டாவதாக!

முன்னேற்றப் பணிக்காக கடந்த மாதம் பிரஜா சாந்தி நகர், ரவீந்திர நகர், பாரதி நகர், ஆர்.எல். புரம், சின்னகுடிலி, ருத்ரவானி தெரு, பாலாஜி நகர், சாய் நகர், T.I.C. பாய்ன்ட், சஞ்சீவய்யா காலனி, நதய பள்ளம், கஞ்சாரபள்ளம், என்னாடு, சங்கல்ராவ் பேட்டை, பெடகடி, M.V.P. காலனி, குண்டூர், லக்ஷ்மி நகர், சாகர் நகர், H.P. காலனி, துர்கா நகர், சித்தம்தாரா, சடாபரம், டிரைவர்ஸ் காலனி, அம்பேத்கார் நகர், டாடா நகர், லக்ஷ்மி புரம், மதுர்பாடா, சிரிபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்று, IBT-இன் தாங்குநர்கள், பங்காளர்களைச் சந்தித்து, காணிக்கைப் பெற்று அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். என் முன்னேற்றப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் :*
*சகோதரி. தேவேஷ் குமாரி*
*மொழி : பண்டேலி*
*பணித்தளம் : சட்டர்ப்பூர் (ம.பி.)*

கர்த்தருக்கே துதி உண்டாவதாக!

கர்த்தரின் கிருபையால் கடந்த மாதம் சிறுவர் வேதாகமத்திற்காக பழைய ஏற்பாட்டு புத்தகங்களிலுள்ள உண்மைச் சம்பவங்களை பண்டேலி மொழிபெயர்ப்புச் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தேன். கடந்த அக்டோபர் மாதத்தில் இதன் சரிபார்ப்புப் பணி, ஒடிஷா மாநிலத்திலுள்ள பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்தில் ஒரு வாரம் 20-ஆம் தேதி முதல் 26-ஆம் தேதி வரை நடைபெற்றது. IMS மிஷனெரி திருமதி. கிரிஜா அவர்கள் சரிபார்ப்புப் பணியை மேற்பார்வை செய்தார்கள். அதன் பின்பு நவம்பர் மாதம் 11-ஆம்

தேதி முதல் 15-ஆம் தேதி வரையிலும் கோவை IBT மையத்தில் பண்டேலி மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட புதிய ஏற்பாடு சரிபார்ப்புப் பணி நடந்தது. இதில் நான் கலந்து கொண்டேன். பெங்களூர் BSI-இலிருந்து Rev. Dr. சுப்ரமணி அவர்கள் கோவை வந்து, சரிபார்ப்புப் பணியை நடத்தினார். புதிய ஏற்பாடு பணிகள் முடிந்தவுடன் சங்கீதம், நீதிமொழிகள் புத்தகங்கள் மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும். இப்பணிகள் தடை, தாமதமின்றி துரிதமாக நடைபெறவும், பண்டேலி மொழியில் புதிய ஏற்பாடு வெளியிட்டு, அம்மொழி பேசும் மக்களுக்கு கொடுக்கப்படவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*முன்னேற்றப் பணியாளர் :*
*சகோ. ரெஜி ஜெல்லிப்பாரா*
*பணித்தளம் : திருச்சூர் (கேரளா)*

கடந்த மாதத்தில் என் முன்னேற்றப் பணிகளைச் செய்ய கர்த்தர் அருளிச் செய்த நன்மைக்காக கர்த்தரைத் துதிக்கிறேன். முன்னேற்றப் பணிக்காக நெல்லிக்குன்னு, சாலக்குடி, பலியங்காடி, கூட்டலா, மறைக்கீல், எழந்துருத்தி, மன்னார்காடு, தச்சம்பாரா, பாண்டிக்காடு, கன்னரா, அஞ்சேரிச்சிரா, கிறிஸ்து நகர், தலோரி, மறைக்காடு மற்றும் திரூர் ஆகிய இடங்களுக்குச் சென்று, IBT-இன் பங்காளர்கள், தாங்குநர்களைச் சந்தித்து, காணிக்கைப் பெற்று அவர்களுக்காக ஜெபித்து வந்தேன். கடந்த அக்டோபர் மாதம் 16-ஆம் தேதியன்று IBT ஊழியத்திலுள்ள முன்னேற்றப் பணியாளர்கள் சில பிரதிநிதிகள் தலைமையில் ஒடிஷா மாநிலத்திலுள்ள IBT-இன் பணித்தளங்களுக்கும், பாப்பன் பள்ளியிலுள்ள சிறுவர் இல்லத்திற்கும் சென்று வந்தோம். அங்குள்ள பணித்தளங்களில் தேவ செய்தியளித்தோம். அங்குள்ள சபை மக்கள் எங்களை வரவேற்று கலை நிகழ்ச்சிகள் நடத்தினார்கள். இப்பணித்தளப் பயணம், மிகவும் பயனுள்ளதாய் இருந்தது. என் முன்னேற்றப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

*மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி :*
*சகோ. சாமுவேல் சாந்தா*
*மொழி : குவி*
*பணித்தளம் : அப்பர்காண்டி (ஒடிஷா)*

கர்த்தருக்கே துதி உண்டாவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணிக்காக புதிய ஏற்பாடு பாகத்தில் ரோமர் அதிகாரம் 1 : 1 முதல் அதி. 16 : 27 வரையிலும், 1 கொரிந்தியர் அதி. 1 : 1 முதல் 10-ஆம் வசனம் வரையிலும், சிறுவர் வேதாகமம் கணினியில் பதிவு செய்யப்பட்டதை சரிபார்ப்புச் செய்தேன். மிஷனெரிப் பணிக்காக லக்காமணி, கேஜாரா கோட்டா, தங்கபேடா ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்து, ஜெபிக்க கேட்ட சகோ. டேனியல், சகோ. அனில் இவர்களுக்காகவும், இவர்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபித்து வந்தேன். என் தாய்மொழியாகிய குவியில் நடைபெற்று வரும் வேதாகம மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் :*
*சகோதரி. லதா ராமச்சந்திரா*
*மொழி : போவி*
*பணித்தளம் : ஹவேரி (கர்நாடகா)*

கர்த்தரின் திருநாமம் மகிமைப்படுவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் சிறுவர் வேதாகமம் பணிக்காக பழைய ஏற்பாடு புத்தகங்களிலுள்ள சம்பவங்களை மொழிபெயர்த்து, கணினியில் கீ-இன் செய்தேன். அக்டோபர் மாதம், ஒடிஷா சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற சரிபார்ப்புப் பணிக்காக சென்று அங்கு நடைபெற்ற ஒரு வாரம் சரிபார்ப்புப் பணியில் கலந்து கொண்டேன். கடந்த ஆண்டு லோகோஸ் முகாமில் வெளியிடப்பட்ட போவி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு விநியோகமும் நடைபெற்று வருகிறது. இதுவரை 600 புத்தகங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளது. புதிய ஏற்பாடு புத்தகங்களை வாங்கிய மக்கள் அனுதினமும் வாசிக்கவும், அவர்கள் கர்த்தரின் பாதையில் நடக்கவும் ஜெபியுங்கள்.

# ஒடிஷா பணித்தளப் பார்வை

ஒடிஷா மாநிலத்திலுள்ள IBT-இன் பணித்தளங்களைப் பார்வையிட தமிழ்நாடு, கேரளாவில் பணிபுரியும் IBT முன்னேற்றப் பணியாளர்கள் 9 பேருடன் கோவை பிரதிநிதிகள் சகோ. ஜாண் சேகர் மற்றும் திருமதி. நவமணி சேகர் ஆகியோர் அக்டோபர் மாதம் 18-ஆம் தேதி காலை 6.30 மணியளவில் பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்திற்கு சுகமாக வந்து சேர்ந்தார்கள்.

சற்று இளைப்பாறிவிட்டு இரவு 10 மணிக்கு 250 கி.மீ. தூரத்தில் உள்ள IBT பணித்தளங்களைப் பார்வையிடப் புறப்பட்டு, காலை 3.30 மணியளவில் கொசகமுடா தாலூக்காவிலுள்ள கோண்டாபுரி IBT பணித்தள ஆலயத்திற்கு வந்து, அங்கு உறங்கிவிட்டு, காலை 6 மணிக்கு அனைவரும் காலை தியானத்தில் IBT ஊழியங்களுக்காக ஜெபித்து முடித்து, காலை உணவும் முடித்தபின் பொதர்காம் பணித்தளம் சென்று, அங்குள்ள IBT சபையில் ஆராதனையில் முன்னேற்றப் பணியாளர் சகோ. செல்வராஜ் தேவ செய்தி கொடுத்தார். பொதர்காம் சபை ஆரம்பிப்பதற்கு உதவி செய்த அபுதாபி தாங்குநரை நினைவு கூர்ந்து ஜெபித்து, சபையின் தேவைகளை நான், முன்னேற்றப் பணியாளர்களுக்கு எடுத்துக் கூறினேன்.

அதன்பின், சந்தோஷ்பூர் பணித்தளம் சென்று பழுதான கூரையையும், சுவர்களையும் பழுது பார்க்க வேண்டியவற்றையும், முன்னேற்றப் பணியாளர்களுக்கு காண்பித்தேன். IBT மூலமாக முதலில் கட்டப்பட்ட அட்டிகான் பணித்தளத்திலுள்ள ஆலயத்தைப் பார்வையிட்ட பின் கோண்டாபுரி பணித்தளம் சென்று உணவருந்தியபின், அங்கேயே அன்று உறங்கினோம். காலையில் 6 மணிக்கு எழுந்து காலை தியானத்தில் IBT தாங்குநர்கள், ஜெபப் பங்காளர்கள் மற்றும் சிறுவர் இல்லத் தாங்குநர்கள் அனைவருக்காகவும் சிறப்பு ஜெபம் ஏறெடுத்து, காலை உணவையும் முடித்தபின், 19-ஆம் தேதியன்று நங்கநால் பணித்தளத்திலுள்ள ஆலயத்தில் ஈரோடு முன்னேற்றப் பணியாளரான சகோ.ராஜன் தேவ செய்தியளித்தார்.

அதனைத் தொடர்ந்து பொண்டுகுடா பணித்தளத்திலுள்ள ஆலயத்தையும் பார்வையிட்டு, அங்கு ஞானஸ்நான ஆராதனையும் நடத்தி முடித்து, மீண்டும் பாப்பன்பள்ளி திரும்பி வரும் வழியில், போடோமசிகான் மற்றும் சீர்மாபாண்டி சபைகளின் விசுவாசிகளையும் சந்தித்து விட்டு இரவு 1.30 மணியளவில் பாப்பன்பள்ளிக்கு வந்து சேர்ந்தோம்.

20-ஆம் தேதி 6.00 மணிக்கு காலை தியானத்தை தொடர்ந்து 7.30 மணிக்கு ஞாயிறு ஆராதனை நடத்தப்பட்டது. அதன்பின் முன்னேற்றப் பணியாளர்கள் Children Home பிள்ளைகளுக்கு வாங்கி தந்த பரிசுகளையும், Snacks ஆகியவற்றையும் கொடுத்து உற்சாகப்படுத்தினார்கள்.

மதிய உணவிற்குப்பின், மாலை 4.30 மணியளவில் பாப்பன் பள்ளியிலிருந்து முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் கோவை பிரதிநிதிகளும் தங்கள் சொந்த ஊர் நோக்கிப் பயணப்பட்டார்கள்.

இந்தப் பணிதளப் பார்வை, முன்னேற்றப் பணியாளர்களுக்கு பயனுள்ளதாக இருந்ததாகக் கூறினார்கள். இந்தப் பயணத்தை ஆசீர்வாதமாய் வழிநடத்திய கர்த்தரின் நாமத்திற்கு ஸ்தோத்திரமுண்டாவதாக!

**சாமுவேல் ஞானதாஸ்**
IBT பணித்தள இயக்குநர்



# ராபர்ட் கால்டுவெல்

## (கி.பி. 1814 - 1891)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

__ஊழியத்தில் தோள்கொடுத்த மனைவி__

1819-இல் நாகர்கோவில் பகுதிக்கு இங்கிலாந்திலிருந்து மிஷனெரியாக வந்து தங்கிய Rev. சார்லஸ் மார்ட் அவர்களின் மூத்த மகளாகிய எலைசா மால்ட் அம்மையாரை 1844 மார்ச் 20-ஆம் நாள் திருமணம் செய்து கொண்டார். அந்த அம்மையாரும் இவரது நற்செய்திப் பணியில் தோள்கொடுத்து இணைந்து பணியாற்றியது பாராட்டுதலுக்குரியது.

__இறுதி நாட்கள்__

ஒருமுறை அவர் இங்கிலாந்து சென்றிருந்த போது அங்கிருந்த அவரது உறவினர்களும், நண்பர்களும் இங்கிலாந்திலேயே தங்கிவிடும்படி வற்புறுத்தினார்கள். அதற்கு கால்டுவெல் *"இத்தனை காலமாக இந்தியர்களுக்காகவே வாழ்ந்தேன். அவர்களோடு ஒன்றி இருந்தேன். இன்னும் உயிர் உள்ள அளவும் அவர்களுக்காகவே உழைப்பேன் அதுமட்டுமல்ல அவர்களுடைய நாட்டிலேயே உயிரைத் துறப்பேன்"* என்று உணர்ச்சிப் பொங்கச் சொன்னார் என்றால் அவர் தமிழ் மக்களை எவ்வளவாய் அன்பு கூர்ந்தார் என்பதை எண்ணிப்பாருங்கள். அவர் 50 ஆண்டு காலம் தமிழ் மண்ணில் வாழ்ந்தார். அதில் 42 காலங்கள் இடையன்குடியிலேயே தங்கி இடையன்குடியை மையமாகக் கொண்டு நற்செய்திப் பணியாற்றினார். சரீர பெலவீனம் காரணமாக ஊட்டியில் சிலமாதங்கள் ஓய்வில் இருந்தார். தன்னுடைய 77வது வயதில் 1891-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 28-இல் தான் நேசித்து, சேவித்த இயேசுவோடு இணைந்து கொண்டார். அவரது சரீரம் இடையன்குடிக்குக் கொண்டுவரப்பட்டு அவர் கட்டிய ஆலயத்தின் பீடத்திற் கண்டையில் அடக்கம் செய்யப்பட்டது. டாக்டர். ரா.பி. சேதுப்பிள்ளை சொன்னதுபோல, கால்டுவெல் இடையன்குடியைத் தனது சொந்த ஊராக்கிக் கொண்டார். 200-ஆம் ஆண்டு பிறந்த நாளை நினைவு கூறும் நாம் அவரது நற்செய்திப் பணியிலும் சமூகப் பணியிலும் அவருடைய அர்ப்பணிப்பையும், ஆர்வத்தையும் பின்பற்றுவோம். நமது நன் முன்மாதிரியாக அவரை நிறுத்திக் கொண்டு முன்னேறுவோம்.

*''ஒருவன் எனக்கு ஊழியம் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக் கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்'' (யோவா. 12:26).*

__செம்மொழிக்கு புகழ் சேர்த்த அயர்லாந்து அறிஞர்__

அயர்லாந்து நாட்டில் பிறந்த சங்கை. ராபர்ட் கால்டுவெல் ஐயர், எபிரெயம், கிரேக்கம், லத்தீன் போன்ற புராதன மொழிகளிலும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற மேலைநாட்டு மொழிகளிலும், சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு மற்றும் குடகு போன்ற இந்திய மொழிகளிலும் நல்ல புலமை பெற்றிருந்தார். "திராவிடம்" என்ற சொல்லை முதன்முதலில் உலகத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமை பேராயர் டாக்டர். சங்கை. ராபர்ட் கால்டுவெல் ஐயரையே சேரும்.

மொழி வரலாற்றிலும், தமிழக அரசியல் வரலாற்றிலும் ஒரு புரட்சியைப் பற்றி எரிய வைத்தவர் கால்டுவெல் என்றால் மிகையாகாது. அவரது 15 ஆண்டுகால அயராத உழைப்பின் மணிமுடி படைப்புத்தான், "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற ஆய்வு நூல்.

இந்த நூலில் "ஆரிய இன மொழிகள் வேறு, திராவிட இன மொழிகள் வேறு. தமிழுக்கும் வட மொழிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. வட மொழியான சமஸ்கிருதத்தின் உதவியின்றியே தமிழ் தனித்து இயங்க வல்லது. தமிழ் மொழி தனித்து இயங்கும் உயர்தனிச் செம்மொழி!" என்று

உறுதியாக கூறியவர் கால்டுவெல். மேலும், வடமொழியிலிருந்தே தென்மொழியான தமிழ்மொழி தோன்றியதென்ற பழங்கருத்தை தவறு என்றும் நிரூபித்தார்.

திராவிட மொழிகளில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு மற்றும் குடகு போன்ற திருத்திய மொழிகளும் துதம், ஓராவோன், கோதம், கந்தம் மற்றும் ராஜ்மகால் போன்ற திருத்தாத மொழிகளுமாக உள்ள ஒரு மொழிக் கூட்டத்திற்கு முதல்மொழி தலைமையும், பழமையும் வாய்ந்த திருத்திய மொழி தமிழே! என்று உறுதிப்பட தனது நூலில் நிரூபித்து உள்ளார். 18 மொழிகளில் புலமை பெற்ற கால்டுவெல் ஐயர் கி.பி. 1856-ஆம் ஆண்டுதான் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை வெளியிட்டார்.

மொழி வரலாற்றில் புரட்சியை ஏற்படுத்திய இந்த நூலை சென்னை பல்கலைக் கழகம் 1875, 1953, 1961, 1976 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து வெளியிட்டுள்ளது. கால்டுவெல் ஆற்றிய மொழிப் பணிக்காக கிளாஸ்கோ பல்கலைக் கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் அளித்து சிறப்பித்தது. ஆங்கில தலைமை பீடம் அவருக்கு, வேதவிற்பன்னர் என்ற பட்டம் அளித்தது.

இவர், திருநெல்வேலி மாவட்டம் இடையன்குடியில் கிறிஸ்தவ மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். இடையன்குடி என்ற வறண்ட பகுதியை வாழ்வதற்கேற்ற பகுதியாக மாற்றியவர். அங்கு தினமும் ஒரு மரம் நடுவதை வழக்கமாக கொண்டிருந்தார். இப்படி அவர் நட்ட மரங்களில் ஒன்று, அவர் நினைவாக உள்ளது. அதற்கு 'புட்டா மரம்' என்று பெயர்.

தமிழின் பெருமையை உயர்த்திய கால்டுவெல் ஐயரின் தோற்றம் 7.5.1814. அவர் மறைந்தது 28.8.1891. அவர் மறைந்தாலும் அவரது புகழ் நிலைத்து நிற்கிறது. அவர் தனக்கென கட்டிய வீடு 17.2.2011 அன்று தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லமாக அப்போதைய தமிழக முதல் அமைச்சரால் அறிவிக்கப்பட்டு திறக்கப்பட்டது. அங்கே அவரது மார்பளவு சிலையும் நிறுவப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் பழமையான கால்டுவெல் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி மேற்கே கால்டுவெல் கல்லூரி ஆகியவை இன்றும் அவரது புகழை பறைசாற்றுகிறது. 2014-ஆம் ஆண்டு மே மாதம் 7-ஆம் தேதி மிஷனெரி ராபர்ட் கால்டுவெல் அவர்களின் 200-ஆவது பிறந்த நாள் நிறைவு ஆண்டு ஆகும். தமிழக முதலமைச்சர், கால்டுவெல் அவர்களின் இப்பிறந்த நாளை அரசு விழாவாக எடுக்க முடிவு செய்துள்ளது மிகுந்த மகிழ்ச்சியளிக்கும் செய்தியாக உள்ளது.

தகவல் - *J. பர்னபாஸ்*
சேலம் வரலாற்று சங்க பொதுச்செயலாளர்
நன்றி - தினத்தந்தி - 2017

*''தென் தமிழகத்தில் கிறிஸ்தவ மிஷனெரிகள்'' என்ற புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.*

---

### உள்ளம் தொடும் உண்மைக் கதைகள் - ஆர்.எஸ். ஜேக்கப்

# தூக்கம் வராவிட்டால் ஜெபி

ஆப்பரேஷன் மொபிலைசேஷன் என்பது ஒரு சுவிசேஷ சங்கம். இச்சங்கம் உலக முழுவதும் சிறந்த சுவிசேஷப் பணி செய்து வருகிறது. லோகாஸ், டெனலாஸ் என்ற சுவிசேஷக் கப்பல்களில் உலகம் முழுவதும் சுற்றிச் சேவை செய்கின்றனர். நமது நாட்டிலும் ஒவ்வொரு மாநிலத்திலும் அவர்கள் குழுக்கள் சிறப்பான வேலை செய்கின்றனர்.

ஆப்பிரிக்காக் கண்டத்தில் எத்தியோப்பிய நாட்டிலும் ஓர் "ஓ எம்" குழு உண்டு. லோகாஸ் கப்பல் அந்நாட்டுக்குச் செல்லும் போது, அந்தக் குழுவினர் அதற்குரிய சகல ஒழுங்குகளையும் கவனிக்கும்படி கேட்கப்பட்டனர்.

கோன்லான், அவர் மனைவி மரிஜிட்டா, உடன் ஊழியர் ஹோம்ஸ் என்ற மூவரும் உட்பகுதிக்குச் சென்று, ஒருநாள் சற்று ஓய்வெடுக்கத் திட்டமிட்டனர். வெந்நீர் ஊற்றுக்கள் உள்ள ஓரிடத்திற்குத் தங்கள் ரோவர் என்ற காரில் பயணம் செய்தனர்.

அந்தப் பகுதிகளில் டான்கிலஸ் என்ற ஒரு கொடூரக் காட்டு ஜாதியினர் உண்டு. வழிப்

போக்கரைக் கொள்ளையடிப்பார்கள். கொலையும் செய்வார்கள். அவர்கள் வாழும் பகுதிக்குப் போகக் கூடாது என்று நண்பர்கள் எச்சரித்திருந்தார்கள்.

மாலையில் திரும்பும்போது ரோவர் பழுதாகி விட்டது. சீக்கிரத்தில் இருட்டிவிடும். ஆங்காங்கே சிங்கத்தடங்கள் காணப்பட்டன. உயிருக்கு ஆபத்து நேரிடலாம். மேலும் அவர்கள் நின்ற பகுதி டான்கிலஸ் ஜாதியினர் வாழும் பகுதியாகவும் இருக்கலாம். ஏற்கனவே நரிகள் ஊளையிட ஆரம்பித்து விட்டன. மூன்று அடி உயரமுள்ள பெரிய ஆமைகள் ஆங்காங்கே ஊர்ந்து கொண்டிருக்கவும் கண்டார்கள்.

மூவரின் மனதிலும் பயம் தோன்றிய போதிலும் அவர்கள் பாதுகாவலுக்காக ஜெபித்தனர். மிகவும் சிரமத்துடன் ரோவரை ஓரளவு செப்பனிட்டு மீண்டும் செயல்பட வைத்தனர். அவர்கள் போக வேண்டிய தூரம் சுமார் 50 கிலோ மீட்டர் இருக்கும். அவர்கள் வாகனமோ மணிக்கு 10 முதல் 15 கிலோ மீட்டர் வேகத்தில்தான் போக முடிந்தது. பாதையோ கரடு முரடு.

திடீரென, எங்கிருந்தோ மூன்று டான்கிலஸ் மக்கள் துப்பாக்கிகளுடன் இவர்கள் முன் தோன்றினர். துப்பாக்கி முனையில் ரோவர் நிறுத்தப்பட்டது. கோன்லான் தன் மனைவியைக் காருக்குள் தள்ளிவிட்டு, முன்னாள் மறித்த வீரனை அணுகுகிறான். அடுத்த இரண்டு வீரரும் காருக்குள் நுழைந்து கொள்ளையிட ஆரம்பித்தனர்.

கோன்லான் முன்னால் மறித்து நின்றவனைப் பயமுறுத்துவது போல உரத்த சத்தமாய் “வழிவிட்டு விலகு” என்று கத்தினான். அவனோ உடனடியாக நெடிய வளைந்த பயங்கரக் கத்தியொன்றை உருவிக் கோன்லான் தொண்டையில் வைத்தான். தன் கணவனுடைய கழுத்து அறுபடப் போகிறதைக் கண்ட மரிஜிட்டா ஊக்கமாக ஜெபித்தாள்; கோன்லாலும் ஜெபித்தான்; “கர்த்தாவே இதுவோ எங்கள் முடிவு? சேவையின் மத்தியில் முடிவல்லவோ மகிமை! மணமாகிச் சில வாரங்களே ஆகின்றன; எங்கள் பணி இன்னமும் ஆரம்பமாக வில்லையே” என்றான்.

கோன்லான் உள்ளத்தில் ஏதோ ஓர் எண்ணம் திடீரென உருவெடுத்தது. ரோவரின் உச்சியில் ஏறினான். தூரத்தில் ஒருவர் வருகிறது போலக் கரமசைத்தான். இதைக்கண்ட கொள்ளையர் இருவரும் மாறி, மாறி ஏதோ பேசினர். தாமதமின்றியே ஓடியே மறைந்தனர். அவர்களுக்கு சுமார் 20 வயது இருக்கும். முன்னால் மறித்து நின்றவன் சுமார் 50 வயது உள்ளவன். ஒருவேளை இளைஞர் இருவரின் தந்தையாகயிருக்கலாம். அவனோ ஓடிவிடாமல் மீண்டும் கொள்ளையடித்துக் கொண்டேயிருந்தான். கோன்லானோ ரோவரை ஓட்ட ஆரம்பித்தான். கொள்ளையனின் கையை இடித்துத் தள்ளிவிட்டு வண்டி ஓட ஆரம்பித்தது. மூவரும் அற்புதமாக தப்பினர்.

கொஞ்ச தூரம் ஓடியபின் வறண்ட ஆற்றுப் படுகையொன்றில் வண்டி மீண்டும் நின்று விட்டது. ஆங்கே இரவைக் கழிப்பது கூடாத காரியமாய் தோன்றியது. துஷ்ட மிருகங்களுக்குத் தப்பவே முடியாது. கொசுக்களும் ஏராளமாகத் தாக்க ஆரம்பித்தன. என்ன செய்வது? ஜெபம் ஒன்றே அவர்கள் உபயோகிக்கக்கூடிய ஆயுதம். ஜெபித்தனர், மீண்டும் கிடைத்தது விடுதலை.

நின்ற இயந்திரம் மீண்டும் இயங்கியது. சற்று தூரம் சென்றபின் பாதை இரண்டாகப் பிரிந்தது. எந்தப் பாதையில் செல்வது? திகைத்தனர். ஆனாலும் ஜெபிக்க மறக்கவில்லை. ஜெபித்து விட்டு ஒரு பாதையைத் தெரிந்து கொண்டனர். நடு இரவாகிவிட்டது. வண்டி இப்போது ஒழுங்கான ஒரு பெருஞ்சாலையை அடைந்தது. எதிர்த்து வந்த ஒரு லாரியை நிறுத்தினர். “உங்களிடம் துப்பாக்கிகள் இருக்கின்றனவா?” என்று விசாரித்தார் லாரி டிரைவர். ‘இல்லை’ என்றனர். “என்ன? இது டான்கிலஸ் காடுகள் ஆச்சே! துப்பாக்கியின்றி இங்கு இப்படி வருவது எத்தனை மதியீனம்!” என்று வருத்தப்பட்டார் லாரி டிரைவர். தன் லாரியுடன் ரோவரைப் பிணைத்துக் கட்டி இழுத்துச் சென்று தகுந்த இடத்தில் சேர்த்தார்.

– தொடரும்

*ஜே.பி. ரூபன் பப்ளிகேஷன்ஸ் கிரியேடிவ் சர்வீஸ் மூலமாக வெளியிடப்பட்ட* ***“உள்ளம் தொடும் உண்மைக் கதைகள்”*** *என்ற புத்தகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு அனுமதியுடன் வெளியிடப்படுகிறது.*

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

1. **STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

2. **INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 60/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 16. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. திட்டமிட்டபடியே ஒடிஷா மாநிலத்திலிருந்து 6 மொழிபெயர்ப்பாளர்களும், சட்டிஷ்கார் மாநிலத்திலிருந்து குடுக் மொழி பெயர்ப்பாளரும், கடந்த நவம்பர் மாதம் 5-ஆம் தேதியன்று கோவை, IBT மையத்திற்கு வந்து தங்கள் மொழிபெயர்ப்பு சார்ந்த மொழிபெயர்ப்பு, கணினியில் கீ-இன் செய்தல் ஆகியவைகளைச் செய்தார்கள். மத்தியப் பிரதேசத்திலிருந்து பண்டேலி மொழி பெயர்ப்பாளர் சகோதரி தேவேஷ்குமாரியும் IBT மையத்திற்கு புதிய ஏற்பாடு சரிபார்ப்புப் பணிக்காக வந்திருந்தார். இதற்காக பெங்களூர் BSI-யிலிருந்து Rev. Dr. சுப்ரமணி அவர்கள் இங்கு வந்து பண்டேலி மொழி புதிய ஏற்பாடு சரிபார்ப்புப் பணியை மேற்கொண்டார். இதற்காக கர்த்தரைத் துதியுங்கள். மிர்கான், கலகாண்டியா மற்றும் சம்பல்புரி மொழிகளில் பழைய ஏற்பாடும், கடபா, குடுக், குவி மற்றும் சோரா மொழிகளில் புதிய ஏற்பாடு பணிகளும் நடைபெற்றன. இப்பணிகள் அர்ப்பணிப்புடன் துரிதமாய் நடக்கவும், அடுத்து நடைபெறும் லோகோஸ் முகாமில் இம்மொழிகளில் ஆயத்தம் செய்யப்படும் புத்தகங்கள் வெளியிடப்பட ஜெபியுங்கள்.

2. 2025-ஆம் வருட காலண்டர்கள்ள பிரதிநிதிகள், முன்னேற்றப் பணியாளர்களுக்கு கொடுக்கப்பட்டதற்காகவும், ECS, Cheques, M.O. மூலமாக காணிக்கைக் கொடுத்து ஊழியத்தைத் தாங்கி வருகிற IBT-இன் தாங்குநர்களுக்கும் தபால் மூலமாக காலண்டர்கள் அனுப்பப்பட்டதற்காகவும் கர்த்தரைத் துதியுங்கள். கடந்த லோகோஸ் முகாமில் நடந்த விபரங்களை சுருக்கமாக காலண்டர்களில் அச்சிடப்பட்டதை லோகோஸ் முகாமில் பங்கு பெறாதவர்கள் படித்து, அறிந்து கொள்ளவும் அனுதின வேத வசனங்களையும் வாசித்தும் பயன்பெற ஜெபிப்போம்.

3. ஹல்பி மொழியில் மொழிபெயர்ப்பு செய்வதற்கு ஏற்கனவே மொழிபெயர்ப்பு செய்து வந்த சகோதரி பிரீத்தி நாக்கும் விருப்பம் தெரிவித்ததற்காக கர்த்தரைத் துதிப்போம். இந்த சகோதரி இப்பணிகளில் அமர்த்தப்படவும், ஆர்வத்துடன் அவர்கள் தங்கள் பணிகளை ஆரம்பிக்கவும் ஜெபிப்போம்.


**SEND ALL YOUR CONTRIBUTIONS**

**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBINO282057 |

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/–

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of — **Mr. K. JAISINGH**, **WORD PUBLISHERS TRUST**, 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Printed by — **Mr. C.K. VENKATESH**, Chandra Prabha Press, 113-118, V.H. Road, CBE-1.

**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd January 2025
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**